4. அறிவிப்பு.

சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவின கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/70) சட்டமன்ற மேலவையில் 9—3—70-ம் நாள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுப் பரிந்துரை எதுமில்லாமல் நிறைவேற்றப்பட்டதென்றும், தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருந்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/70) மேலவையில் 9—3—70-ம் நாள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்பட்டுத் திருத்தமேதுமின்றி நிறை வேற்றப்பட்டதென்றும் மேலவைத் தலைவரிடம் இருந்து வந்துள்ள செய்தியை இந்த அவைக்கு அறிவிக்கிறேன்.

5. 1970-71 ஆம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகை யும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,56,77,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

THIRU K. VINAYAKAM : To discuss about the desirability of reforming the entire district administration, I move the following cut motion :—

"That the allotment of Rs. 15,56,77,100 under Demand No. 9—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100."

திரு. ஏ. அ. சுப்பராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, இராம நாதபுரம் மாவட்டத்தை நிர்வாக வசதியைக் கருதியும் மக்களின் நலனை உத்தேசித்தும் இரண்டாக பிரித்தல் குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகை யும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,56,77,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் குறைந்தபட்சம் மாதாமாதம் இரண்டு நாட்கள் கூட்டம் நடத்த வேண்டுமென்று வற்புறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகை யும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,56,77,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.